2026 ஜூலை மாதம் 08– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 11/2026

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 08– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW3 (LW2 ) – முத்துக்குமரன் |
| தகப்பனார் பெயர்: | தமிழன் |
| ஊர்: | சின்னமனூர் |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | தலைமை காவலர், சின்னமனூர் காவல்நிலையம் |
| வயது : | 38 |

08.07.2026

(1 முதல் 7 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட திரு.G.முத்துக்குமார், தலைமை காவலர் எண்.803 அவர்களால் அடையாளம் காணப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், சின்னமனூர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2024ம் வருடம் தேனி மாவட்ட மத்திய நுண்ணறிவு பிரிவில் தலைமை காவலராக பணியாற்றிய போது, போதை பொருள் நடமாட்டம், போதை பொருள் கண்டுபிடிப்பு சம்பந்தமாக தகவல் சேகரிப்பு பணி செய்து வந்தேன். கடந்த 09.04.2024ம் தேதி இரவு 9.00 மணிக்கு நான் தேனி, மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் பணிபுரியும் முதல்நிலை காவலர்

ஸ்ரீதர் என்பவர் அன்னஞ்சி, காளியம்மன் கோவில் அருகில் கஞ்சா இருப்பதாகவும், ஆய்வாளருக்கு தகவல் சொன்னதாகவும், உதவிக்கு வருமாறு அழைத்ததின்பேரில் நானும், ஸ்ரீதரும் எனது இருசக்கர வாகனத்தில் அன்னஞ்சி, காளியம்மன் கோவில் அருகே சென்றோம்.

2. அங்கு திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. எனது இருசக்கர வாகனத்தை காளியம்மன் கோவில் அருகே நிறுத்திவிட்டு, காளியம்மன் கோவில் பின்புறம் உள்ள சுடுகாட்டு பக்கம் கண்காணித்து வந்தோம். மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு ஆய்வாளர் அவர்கள் பிரிவிலிருந்து தலைமை காவலர் திரு.அசோக் மற்றும் காவலர் திரு.முத்துச்செல்வம் ஆகியோர்களை அனுப்பி வைத்தார். நாங்கள் நான்கு நபர்களும் கஞ்சா சம்பந்தமாக கண்காணித்து வந்ததில் அந்த இடத்தில் நான்கு நபர்கள் கூடியிருந்தார்கள். அவர்கள் அருகில் TN 67 AR 8003 பதிவெண்கொண்ட பஜாஜ் டிஸ்கவர் மற்றும் TN 60 J 2930 பதிவெண்கொண்ட TVS Star City இருசக்கர வாகனமும் இருந்தன. எங்களை பார்த்தவுடன் நான்கு நபர்களில் இரண்டு நபர்கள் தப்பியோடி சென்றுவிட்டனர். மீதியிருந்த இரண்டு நபர்களை பிடித்து விசாரித்தப்போது, அவர்கள் பெயர் ஆஜர் எதிரிகளான காளி மற்றும் சசி என்று சொன்னார்கள்.

3. ஓடிச்சென்ற நபர்கள் முருகன் மற்றும் அசார் என்று தெரிந்தது. மேற்படி TN 67 AR 8003 பதிவெண்கொண்ட பஜாஜ் டிஸ்கவர் இருசக்கர வாகனத்தின் டேங்க் கவரை சோதனை செய்த போது, அதில் காக்கி நிற பொட்டலம் ஒன்று இருந்தது, அதனை பிரித்து பார்த்த போது அதில் கஞ்சா இருந்தது. கஞ்சா சம்பந்தமாக காளி மற்றும் சசி ஆகியோர்களை விசாரித்தப்போது அவர்கள் முன்னுக்கு பின் முரணாக பதில் தெரிவித்தார்கள். அவர்கள் இருவரையும் காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரிக்க மேற்படி TN 67 AR 8003 பதிவெண்கொண்ட பஜாஜ் டிஸ்கவர் வாகனத்தை ஸ்டார்ட் செய்த போது ஸ்டார்ட் ஆகவில்லை.

4. அந்த கஞ்சா பொட்டலத்தை அதிலிருந்து எடுத்து, அருகில் இருந்த TN 60 J 2930 பதிவெண்கொண்ட TVS Star City இருசக்கர வாகனத்தில் நானும், ஸ்ரீதரும் சசி என்பவரை ஏற்றிக்கொண்டும், எங்களுடன் இருந்த அசோக் மற்றும் முத்துச்செல்வம் ஆகியோர்கள் காளி என்பவரை அவர்கள் வந்த இருசக்கர வாகனத்தில் ஏற்றிக்கொண்டும் காவல்நிலையத்திற்கு அழைத்துச் செல்ல காளியம்மன் கோவில் அருகே வந்தபோது, காளியும், சசியும் எங்களிடமிருந்து தப்பியோட முயற்சி செய்தனர். அவர்கள் இருவரையும் பிடிக்க முயற்சி செய்யும்போது, அந்த இடத்தில் இருந்த பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த ஆஜர் எதிரிகளான 3 வது எதிரி அஜித், 6 வது எதிரி முத்துராஜ், 4 வது எதிரி சுபாஷ் மற்றும் 20 நபர்கள் எங்களை அவர்களை பிடிக்க விடாமல் வாக்குவாதம் செய்தார்கள்.

5. நாங்கள் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவலர்கள் தான் என்றும், கஞ்சா சம்பந்தமாக அவர்களை காவல்நிலையத்திற்கு அழைத்துச் செல்கிறோம் என்று கூறினோம். அவர்கள் எங்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்கள். எங்கடா வந்து யாரடா என்று தேவிடியா பயல்களா என்று அசிங்கமாக பேசி, என்னையும், ஸ்ரீதரையும் கழுத்தை பிடித்து நெறித்து, கையால் இத்தோடு செத்து, தொலைந்து போங்கடா என்று சொல்லி தாக்கினார்கள். அருகிலிருந்த காவலர்களும், மற்றும் சிலரும் எங்களை விலக்கிவிட்டார்கள். எனக்கு முகத்திலும், ஸ்ரீதருக்கு கழுத்திலும் காயம் ஏற்பட்டது. அருகிலிருந்தவர்கள் விலக்கிவிடாமல் இருந்திருந்தால் எங்களை கொன்றிருப்பார்கள்.

6. பின்னர் அனைவரும் சேர்ந்து இந்த பக்கம் இனிமேல் வந்தீர்கள் என்றால் கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள். நானும், ஸ்ரீதரும் தேனி, க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சென்றோம். தள்ளுமுல்லு நடக்கும்போது 1வது எதிரி காளி எங்களது இருசக்கர வாகனத்தை உதைத்து தள்ளி, அதிலிருந்த கஞ்சா பொட்டலத்தை கீழே சிதறவிட்டார். அல்லிநகரம்,

சார்பு ஆய்வாளர் அவர்கள் வந்து விசாரிக்க நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க ஸ்ரீதர் எழுத்துமூலமாக புகார் கொடுத்தார். நான் அந்த புகாரில் சாட்சி கையொப்பம் செய்தேன். இது சம்பந்தமாக அல்லிநகரம் காவல் ஆய்வாளர் எங்களை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். விஷ்வா என்பவரும் எங்களை தாக்கினார். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>4 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

7. அன்னஞ்சி, காளியம்மன் கோவில் அருகில் கஞ்சா விற்பனை நடப்பதாக எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் முதல்நிலை காவலர் ஸ்ரீதர் சொல்லி தெரிந்து கொண்டேன். எத்தனை மணிக்கு சொன்னார் என்றால் சுமார் இரவு 9.00 மணி ஆகும். சம்பவ இடத்திற்கு நானும், ஸ்ரீதரும் சென்றோம், தலைமை காவலர் அசோக் நாங்கள் சென்றவுடன் வந்தார். அல்லிநகரம், சார்பு ஆய்வாளர் அவர்கள் வந்து விசாரிக்க நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க ஸ்ரீதர் எழுத்துமூலமாக புகார் கொடுத்தார். நான் அந்த புகாரில் சாட்சி கையொப்பம் செய்தேன். இது சம்பந்தமாக அல்லிநகரம் காவல் ஆய்வாளர் எங்களை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

8. நான் என்னுடைய TN 60 T 2707 என்ற Honda Shine இருசக்கர வாகனத்தில் சென்றேன். அசோக், முத்துச்செல்வம் யார் வாகனத்தில் வந்தார்கள் என்றால் அசோக்கின் வாகனத்தில் வந்தார்கள். அந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஸ்ரீதர் என்பவருக்கு கஞ்சா புழக்கம் இருப்பதாக எப்படி தெரிந்து கொண்டார் என்றால் அவரது ரகசிய தகவாளி மூலம் தெரிந்து கொண்டார். ஸ்ரீதருக்கு இரகசிய தகவாளி எத்தனை மணிக்கு தகவல் சொன்னார் என்றால் எனக்கு தெரியாது. நான் எத்தனை மணிக்கு சுடுகாட்டிற்கு சென்றேன் என்றால் சுமார் 9.15 முதல் 9.30 மணிக்குள்

இருக்கும். நாங்கள் சென்று காளியம்மன் கோவில் அருகில் வாகனத்தை நிறுத்திவிட்டு, நடந்து சென்றவுடன், அவர்களும் வந்தார்கள் என்றால் சரிதான்.

9. சுடுகாட்டு பகுதியில் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் அரைமணி நேரம் இருக்கும். எந்த இடத்தில் பைக்கில் கஞ்சா வைத்து நின்று கொண்டிருந்தார்கள் என்றால் சுடுகாட்டின் கிழக்குப் பக்கம் ஆகும். சுடுகாட்டிற்கு சென்று அரைமணிநேரம் இருந்த போது, சுடுகாட்டிலிருந்த நான்கு நபர்கள் எந்த இடத்தில் இருந்தார்கள் என்றால், நான் மொத்தமாக அங்கு இருந்த நேரம் அரைமணிநேரம் என்று கூறினேன், நாங்கள் சுடுகாட்டிற்கு சென்ற சமயத்திலேயே அவர்கள் அங்கிருந்தார்கள். நாங்கள் அங்கு சென்றவுடன் என்ன விசாரித்தோம், எங்களை பார்த்தவுடன் இரு நபர்கள் ஓடிவிட்டார்கள், மற்ற இரு நபர்களிடம் நாங்கள் போலீசார் என்று கூறி, பெயர், விலாசம் கேட்டு விசாரித்தோம். மேற்சொன்ன விபரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

10. சம்பவதத்திற்கு முன்பு அன்னஞ்சி சுடுகாட்டிற்கு ரோந்து பணிக்காக சென்றுள்ளேனா என்றால் இல்லை. சம்பவத்தன்று அன்னஞ்சி சுடுகாடு இருட்டாக இருந்தது என்றால் சரிதான். இருட்டாக இருந்த சமயத்தில் ஆள் அடையாளம் தெரியாது என்றால் சரியல்ல, ஆள் அடையாளம் தெரியும் அளவிற்கு வெளிச்சம் இருந்தது. ஓடிய இரண்டு நபர்களின் பெயர்களை எதிரிகள் காளி மற்றும் சசி கூறினார்கள் என்றால் சரிதான். இரண்டு எதிரிகளையும் இரண்டு இருசக்கர வாகனத்தில் நடுவில் உட்காரவைத்து அழைத்து வந்தோம் என்றால் சரிதான். என்னுடைய வாகனத்தின் ஸ்ரீதர் ஓட்டி வந்தார், மற்றொரு இருசக்கர வாகனத்தை அசோக் ஓட்டிவந்தார்.

11. நான் யாருக்கு பின்னால் அமர்ந்து யாரை பிடித்து வந்தேன் என்றால் ஸ்ரீதர் ஓட்ட, நடுவில் எதிரி சசி அதன் பின்னால் நான் அமர்ந்து வந்தேன், அசோக் ஓட்டிய இருசக்கர வாகனத்தில் நடுவில் எதிரி காளி இருக்க

முத்துச்செல்வம் பின்னால் அமர்ந்து வந்தார். தப்பியோடினார்களா என்றால் இருசக்கர வாகனத்தில் இருந்து தாவ முயற்சி செய்தார்கள், நாங்கள் வாகனத்தை நிறுத்திவிட்டோம். எந்த இடத்தில் தப்பியோட முயற்சித்தார்கள் என்றால் காளியம்மன் கோவில் முன்பு ஆகும். இரண்டு எதிரிகளும் ஒரே நேரத்தில் தப்பியோட முயற்சித்தார்கள் என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் காளியம்மன் கோவில் திருவிழா நடைபெற்றது என்றால் சரிதான்.

12. திருவிழா என்பதால் ஊர்மக்கள் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். எங்களை தாக்கிய எதிரிகளின் பெயர்களை எப்போது தெரிந்து கொண்டோம் என்றால் ஸ்ரீதர் சொல்லி அன்றிரவு 12.00 மணிக்கு தெரிந்து கொண்டேன். புகார் எத்தனை மணிக்கு ஸ்ரீதர் கொடுத்தார் என்றால் மறுநாள் காலை 11.00 மணிக்கு கொடுத்தார். மறுநாள் 16.00 மணிக்கு புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1–ல் சார்பு ஆய்வாளர் 16.00 மணிக்கு புகாரை பெற்றதாக உள்ளது என்றால் சரிதான். நானும், ஸ்ரீதரும் எத்தனை மணிக்கு தேனி, க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் இரவு 11.00 மணிக்கு ஆட்டோவில் சென்றோம்.

13. மருத்துவரிடம் என்னை எத்தனை நபர்கள் தாக்கியதாக கூறினேன் என்றால் 17 ஆண்கள், 35 பெண்கள் தாக்கியதாக சொன்னேன். தாக்கிய பெண்களின் பெயர்களை கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். எந்தெந்த எதிரிகள் எந்தெந்த இடங்களில் தாக்கினார்கள் என்றால் பொதுவாக அனைத்து எதிரிகளும் தாக்கினார்கள், எந்தெந்த எதிரிகள் எந்தெந்த இடத்தில் தாக்கினார்கள் என்று தெரியாது. எந்த ஆட்டோவில் சென்றோம் என்றால் ஷேர் ஆட்டோவில் அன்னஞ்சியிலிருந்து தேனி புதிய பேருந்து நிலையத்திலிருந்து, அங்கிருந்து அரசு பேருந்தில் தேனி, க.விலக்கு மருத்துவமனைக்கு சென்றோம். அன்னஞ்சியிலிருந்து க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு எவ்வளவு நேரத்தில் செல்ல முடியும் என்றால் அரைமணிநேரத்தில் செல்லலாம்.

14. க.விலக்கு அரசு மருத்துவமனையில் நள்ளிரவு 12.31 மணிக்கு அனுமதிக்கப்பட்டேன் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு எங்கு வைத்து விசாரித்தார் என்றால் க.விலக்கு அரசு மருத்துவமனையில் 10.04.2024 ம் தேதி இரவு 7.00 மணிக்கு விசாரித்தார். நான் அந்த மருத்துவமனையில் எத்தனை நாட்களாக உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுக்கொண்டேன் என்றால் அன்றிரவே சிகிச்சை பெற்று விடுவிக்கப்பட்டேன். என்னை எதிரிகள் கொலைவெறி தாக்குதல் நடத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மருத்துவமனையில் சிகிச்சை பெறாமல் அன்றிரவே வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சிகிச்சை பெற்று சென்றேன். அன்றிரவே வீட்டிற்கு சென்றுவிட்டதால் ஆய்வாளர் விசாரித்திருக்க முடியாது என்றால் சரியல்ல.

15. நானும், ஸ்ரீதரும் மாறு உடையில் ரோந்து சென்றோம் என்றால் சரிதான். அன்னஞ்சியில் திருவிழா சமயத்தில் நானும், ஸ்ரீதரும் அளவிற்கு அதிகமாக மது அருந்தியிருந்தோம் என்றால் சரியல்ல. மது அருந்தி ஊர்திருவிழாவின்போது நாங்கள் பிரச்சனை செய்ததால் ஊர்மக்கள் வெளியூரிலிருந்து வந்த எங்களை வெளியேறுமாறு கூறினார்கள் என்றால் சரியல்ல. மதுவிலக்கு பிரிவில் இருந்து கொண்டு மது அருந்திவிட்டு பிரச்சனை செய்ததை மக்கள் கேட்டதால் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகள் முத்துராஜ், மனோஜ், சுபாஷ் ஆகியோர்களை எங்கு வைத்து பார்த்தேன் என்றால் காவல்நிலையத்தில் வைத்து பார்த்தேன்.

16. அடையாள அணிவகுப்பு நடத்தினார்களா என்றால் இல்லை, அடையாளம் காட்டச் சொன்னார்கள், நான் அடையாளம் காட்டினேன். எந்த தேதியில் அடையாளம் காட்டினேன் என்றால் ஞாபகமில்லை. எதிரிகளை நான் பார்க்கவில்லை என்றாலும், எதிரிகள் அன்னஞ்சி இளைஞர் நற்பணி மன்ற உறுப்பினர்கள் என்பதால் அவர்கள் பெயர்களை தெரிந்து கொண்டு பொய்யான

வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடன் பணிபுரியும் புகார்தாரர் ஸ்ரீதருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் 4 வது எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் வைத்து எதிரிகளை அடையாளம் காட்டியதாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

**1 முதல் 3 மற்றும் 5 முதல் 7 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1 முதல் 3 மற்றும் 5 முதல் 7 எதிரிகள் தரப்பிற்கு போதுமான காலஅவகாசம் வழங்கியும் குறுக்கு விசாரணை செய்யாத காரணத்திற்காக 1 முதல் 3 மற்றும் 5 முதல் 7 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறு விசாரணை** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 08.07.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI Digitally signed by G SREE DEVI Date: 2026.07.08 18:18:24 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
08.07.2026